ஓம் கம் கணபதியே நமஹ.



ஹேர்ணிங், டென்மார்க்

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் – 2025

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும்- அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்தாள்
நண்ணுவதும் நல்லோர் கடன்.

**மஹாகும்பாபிஷேகம்**
**11-04-2025**
**வெள்ளிக்கிழமை**
**பகல் 10.00 - 11.00**

**எண்ணெய்க் காப்பு**
**10-04-2025**
**வியாழக்கிழமை**
**காலை 7.00 - மாலை 5.00**

### தல நேரிசை வெண்பா

சீர்பெருகு டென்மார்க்கில் செம்மைமிகு ஹேர்ணிங்கில்
பேர்கொண்ட சித்திதரு பிள்ளையார் -வேர்கொண்டு
வந்துறைந்து நல்லருளை வாரி வழங்கிடச்
சிந்தனை செய்வோம் சிறந்து.

இறையருளை ஒன்றாகக் குவித்து தரும் இடமாகக் கருதப்படும் ஆலயத்தில் அத்தெய்வ சாந்நித்யம் பரவ வேத மந்திர ஓசையும் சிவாகமச் செயல்களும்,மங்கள இசையும் திருமுறை மற்றும் அருட்பாடல்களும், நடனம் முதலான கலைகளும் சேர்ந்திணைந்து,யாகங்கள் மற்றும் கும்பங்கள் மூலம் அருள் அலையை நிலைநிறுத்தும் பெரும் வைபவம் பிரதிஷ்டை ஆகிய மஹா கும்பாபிஷேகமாகும். சடங்கு, சம்பிரதாயம், சாஸ்திரம், மரபு மாறாமல் நிகழவிருக்கும் இப் புனித கைங்கர்யம் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் டென்மார்க் நாட்டில் வடமொழியும் தென்தமிழும் சிறந்தோங்கும் ஹேர்ணிங் பதியில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அருளாட்சி செய்துவரும் சித்தி விநாயகர் ஆலயத்தில் நிகழும் மங்கள குரோதி வருடம் பங்குனி மாதம் தமிழுக்கு 29ம் நாள் ஆங்கிலத் திகதி 11-04-2025 வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரமும் வளர்பிறை சதுர்த்தசித் திதியும் சித்தாமிர்த யோகமும் கூடிய பகல் 10ஷ.00மணிமுதல் 11.00 மணி வரையுள்ள மிதுன லக்ன சுப வேளையில் ,நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.அடியார்கள் அனைவரும் கலந்து தர்சனம் செய்து சித்தி விநாயகப் பெருமானின் திருவருள் பெறும் வண்ணம் வேண்டுகிறோம் .

## கிரியாகால நிகழ்வுகள்

**08-04-2025 செவ்வாய்க் கிழமை**
காலை 6.00 மணிக்கு கர்மாரம்பம் (சூரிய உதயத்திற்கு முன்பு என்பதால் திங்கள் பின்னிரவு) தொடர்ந்து அனுக்ஞை திரவிய பூஜை ,கணபதி ஹோமம் பேரிதாடனம் ,நவக்கிரக ஹோமம், ரக்ஷோக்ன ஹோமம் ,திசா ஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம் யந்திர பூஜை
மாலை 6.00 மணி கிராமசாந்தி பிரவேசபலி வாஸ்து சாந்தி

**09-04-2025புதன்கிழமை**
காலை8.00மணிமுதல் விநாயகர் வழிபாடு யந்திரபூஜை பூர்த்தி, தீர்த்த சங்கிரஹணம், சூர்யாக்னி சங்கிரஹணம்கடஸ்தாபனம் ,ஸ்தூபி ஸ்தாபனம்
மாலை4.00மணி முதல் விநாயகர் வழிபாடு மிருத் சங்கிரஹனம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம் கடஸ்தாபனம் ,கலா கர்ஷனம் , கும்பம் யாகா சாலாப் பிரவேசம் ,தீபஸ்தாபனம் ,யந்திர ஸ்தாபனம் பிம்பஸ்தாபனம் முதலாம் காலயாகபூஜைவேத ஸ்தோத்திர நாத கீத திருமுறை பாராயணம்

**10-04-2025வியாழக்கிழமை**
காலை7.00 மணிமுதல் மாலை 5.00மணி வரை எண்ணைக்காப்பு காலை 8 .00மணி விநாயகர் வழிபாடு பூதசுத்தி ,நியாசங்கள் ,யாகசாலைப்பிரவேசம் யாகபூஜை விசேட திரவ்ய ஹோமம் ஸ்தோத்திர நாத கீத திருமுறை உபசாரங்கள்
மாலை.4.00 மணி முதல் விநாயக வழிபாடு பிம்பசுத்தி பூஜை யாக பூஜை,பூர்வ சந்தானம் ,பச்சிம சந்தானம் வேத ஸ்தோத்திர நாத கீத திருமுறை சமர்ப்பணம்
11-04-2025 காலை 6.30மணிமுதல் விநாயகர் வழிபாடு யாகபூஜைகள் மஹாபூர்ணாகுதி தீபாராதனை சதுர்வேத,ஆகம ,புராண,சித்தாந்த ஸ்தோத்திர-நாத கீத,தாள நடன திருமுறை உபசார சமர்ப்பணம்
9.30 மணியளவில் கும்ப பிரதக்ஷணம் 10.00மணி ஸ்தூபி அபிஷேகம் தொடர்ந்து மூர்த்தி அபிசேகம் தசதர்சனம் சம்பாவனை ஆசியுரை மகாபிஷேகம்

### குருமண்டலம்

சர்வ போதகம் வேதாகம ஞான பூஷணம் சிவஸ்ரீ அ,நா.சோமாஸ்கந்தக் குருக்கள் .M.Phill லண்டன்
பிரதிஷ்டா பிரதம குரு சைவப் புலவர் வைதிகசைவ ரக்ஷாமணி சிவஸ்ரீ பால வசந்தக் குருக்கள் B.A(Hons) லண்டன் கற்பகபதி கற்பக விநாயகர் கோவில்
சர்வ சாதகம் ஆகமப் பிரவீன சிவஸ்ரீ ரகு.கமலநாதக் குருக்கள் B.A(Hons) லண்டன்
பிரதம குரு என்பீல்ட் நாகபூஷணி அம்மன் கோவில்
சாதகர்கள் வேத சிவாகம நிதி சிவஸ்ரீ நா.விக்னேஸ்வரக் குருக்கள் பிரதமகுரு விம்பிள்டன் பிளையார் கோவில் லண்டன்
ஆகமப் பிரவீன சிவஸ்ரீ மஹா.உமாபிரசாத் குருக்கள் லண்டன்

### பங்கு கொள்ளும் குருமார்கள்

சிவாகம பால சூர்யன் சிவஸ்ரீ சிவ கோகுல நாதக் குருக்கள் மிச்சம் நாகபூஷணி அம்மன் கோவில் லண்டன்
சிவாகம சாகரம் சிவஸ்ரீ சூ.லம்போதரக் குருக்கள் லண்டன் வேல்ஸ் கல்பக விநாயகரகோவில்
சிவாகமக்கிரியா ரெத்தினம் சிவஸ்ரீ ஸ்ரீநி குகன் குருக்கள் கனடா
ஆகமப் பிரவீன சிவஸ்ரீ கிருஷ்ண பங்குசக் குருக்கள் கந்தசாமி கோவில் கனடா
ஆகமப் பிரவீன சிவஸ்ரீ பால. பாலசுந்தரக் குருக்கள் அம்மன் கோவில் சவுத் ஆபிரிக்கா
சிவாகம ஜோதி சிவஸ்ரீ சோம பிரணவக் குருக்கள் லண்டன்

### தேவஸ்தான குருமார் குருமார்

இறையருள் சிவஸ்ரீ இரத்ன ஜெயமுரளிக் குருக்கள் டென்மார்க்
சிவாச்சார்ய மணி சிவஸ்ரீ ம.கணேசக் குருக்கள் டென்மார்க்
உதவி அர்ச்சகர் பிரும்மஸ்ரீ ஜெய.கீதைய சர்மா டென்மார்க்
யாக சம்ரக்ஷகர் சிவஸ்ரீ ஜோதி சரவணராஜ குருக்கள் லண்டன் பிரும்ம ஸ்ரீ பால வாமன் சர்மா ஜெர்மனி பிரும்மஸ்ரீஜெய சங்கர்சன் சர்மா, ஜெர்மனி
பாகசம்ரக்ஷகர் பிரும்மஸ்ரீ ராஜ முரளி சர்மா லண்டன்
ஸ்தபதி.எம்.ஜி. ரவிசங்கர் தமிழ்நாடு, மங்கள வாத்தியம் நாதஸ்வர வித்வான் N.K பாலமுரளி குழுவினர் தவில் வித்வான் S.சுகுமாரன்
இவர்களுடன் மேலும் பல ஐரோப்பியக் கலைஞர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

நன்றி
பரிபாலனசபை
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

தொடர்ந்து மண்டலாபிஷேகம் 48 நாட்கள் நடைபெறும். மண்டல பூர்த்தி 18-05-2025 புதன்கிழமை